Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.490/2025

Deposition of witness for the PW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,

in accordance with the provision of Act I for 1873 on 12-03-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்திரசேகர் | Village | : |
| Father's / Husband's Name | : பொன்ஆரோக்கியம் | Calling | : |
| Age | : | Taluk | : |

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது டி7-டேங்க் பேக்டரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். இவ்வழக்கு சம்பவ காலத்தில் அதே டேங்க் பேக்டரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 01.03.2024 ஆம் தேதி இரவு 09.00 மணிக்கு நானும் என்னுடன் பணியாற்றும் தலைமை காவலர் 12123 திரு.கணேசன் என்பவரும் எனக்கு சொந்தமான TN13-Y-4605 ஹோண்டா சைன் பிளாக் கலர் வண்டியில் ரோந்து பணியில் இருந்தபொழுது 02.03.2024 ஆம் தேதி காலை சுமார் 04.30 மணியளவில் நாங்கள் இருவரும் ஆர்ச்அந்தோனி நகர், 400 அடி பைபாஸ் ரோட்டில் ரோந்து அலுவலில் இருந்தபொழுது TN05-z-5766 Bolero நான்கு சக்கர வாகனம் வேகமாக வந்ததால் சந்தேகத்தின் பேரில் அதனை நிப்பாட்டிய போது வாகனம் நிற்காமல் சிறிது தூரத்தில் வேகத்தடையின் மீது ஏறி நின்றுவிட்டது. நாங்கள் இருவரும் எனது இரு சக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு அருகே சென்று யார் என்று விசாரித்தபொழுது அதில் ஒரு நபர் ஒல்லியாக இருந்தவர் ஒரு பெரிய கத்தியை எடுத்துக்கொண்டு கீழே இறங்கி எங்கள் இருவரையும் ஓத்தா

தேவிடியா பசங்களா என்று அசிங்கமாக திட்டினார்கள். நாங்கள் இருவரும் எதிரியின் கையில் கத்தி இருக்கவே சுதாரித்து பின்னே வந்துவிட்டோம். அந்த இரு நபர்களும் சாவியுடன் இருந்த என்னுடைய இரு சக்கர வாகனத்திற்கு அருகே சென்று நின்றுகொண்டுவிட்டார்கள். அவர்கள் எனது வண்டியை எடுக்க முற்பட்டார்கள். நான் எனது வண்டியை எடுக்காதீர்கள் என்று சொன்னேன். இரண்டுபேரும் கிட்ட வந்தா வெட்டிவிடுவோம் என்று கூறி என்னுடைய வண்டியை வலுக்கட்டாயமாக எடுத்துச் சென்றுவிட்டார்கள். இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜரில் இருப்பவர்கள் தான் அந்த எதிரிகள் இரண்டு பேரும். ஒல்லியாக வெள்ளை சட்டை போட்டிருப்பவர் தான் கத்தியை வைத்து மிரட்டினார். ஆரஞ்சு சட்டை போட்டவர் எனது வண்டியை எடுத்துச் சென்றார். இவர்கள் விட்டு சென்ற பொலிரோ வண்டியில் இரும்பு கம்பிகள் மேலே இருந்தது. என்னிடம் காட்டப்படுகின்ற படத்தில் இருக்கின்ற பொலிரோ வண்டிதான் அது. இந்த படம் **அ.த.சா.ஆ.1.** என்னிடம் காட்டப்படுகின்ற படத்தில் இருக்கின்ற இரு சக்கர வாகனம் தான் என்னுடைய வண்டி. இந்த படம் **அ.த.சா.ஆ.2.** இது சம்மந்தமாக ஆய்வாளரிடம் புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் இது தான் அது **அ.த.சா.ஆ.3.** ஆய்வாளர் என்னை விசாரித்துக்கொண்டார். அதன்பிறகு 07.03.2024 அன்று காவல் நிலையத்தில் ஆஜர் எதிரிகள் 2 பேரையும் பிடித்து வைத்திருந்ததாக தகவல் வந்தது. நானும் தலைமை காவலர் கணேசனும் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு 4, 5 பேர்கள் இருந்தார்கள். எல்லோரும் சிவிலியன்ஸ், அதில் இன்ஸ்பெக்டர் சம்பவம் நடந்ததில் யாராவது இருக்கின்றார்களா என்று கேட்டார். நான் 2 பேர்களையும் அடையாளம் காட்டினேன். கத்தி வைத்திருந்த நபர் பெயர் விசு என்கிற விஸ்வநாதன். மற்றொரு நபர் பெயர் அருண். 2 பேரும் சோழவரம் பகுதியை சேர்ந்தவர்கள் என்று இன்ஸ்பெக்டர் சொல்ல நான் தெரிந்துகொண்டேன். நான் காவல் நிலையத்தில் அடையாளம் காட்டிய 2 நபர்கள் தான் இன்று இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருப்பவர்கள். இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்துக்கொண்டார்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 2003 ஆண்டு காவல் துறை பணியில் சேர்ந்தேன். நான் 01.03.2024 அன்று இரவு 9 மணிக்கு நைட் ரவுண்ட்ஸ் பணியை ஆரம்பித்தோம். அன்றைய

தேதியில் ரேஞ்ச் இன்ஜார்ச் ஆபிசர் யார் என்றால் ஆவடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஆய்வாளர் திருமதி.சுகுணா அவர்கள் தான் அன்றைய தினம் ரேஞ்ச் இன்ஜார்ச் ஆபிசர். அன்றைய தினம் எத்தனையாவது பீட்டிற்கு ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் நாங்கள் கிரைம் பீட் அதனால் எல்லா பகுதிக்கு அன்றைய தேதியில் ரோந்து சென்றோம். அதாவது ஆவடி டேங்க் பேக்டரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து சென்றோம். இந்த சம்பவம் தொடர்பாக நைட் ரவுண்ட் ரேஞ்ச் ஆபிசரிடம் சொன்னோம். நைட் ரவுண்டு செல்லும்பொழுது பட்டா செக் செய்ய வேண்டும், பாக்கெட் டைரி எடுத்துச் செல்ல வேண்டும். அந்த பாக்கெட் டைரியில் நைட் ரவுண்ட் ரேஞ்ச் ஆபிசர் கையெழுத்துப் போடுவார். அன்றைய தினம் சுகுணா மேடம் பாக்கெட் டைரியை பார்த்து கையெழுத்துப் போட்டார்கள். அந்த பாக்கெட் டைரியை இன்ஸ்பெக்டர் விசாரித்தபொழுது அவரிடம் கொடுத்தோமா என்றால் அந்த வண்டியில் வைத்திருந்தோம் அந்த வண்டியோடு போய்விட்டது. அந்த வண்டி எந்த தேதியில் சீஸ் செய்யப்பட்டது என்றால் 07.03.2024 அன்று சீஸ் செய்யப்பட்டது. 02.03.2024 அன்று காலை 8.45 மணிக்கு மேற்படி எனக்கு சொந்தமான TN13-Y-4605 இரு சக்கர வாகனத்தை ஆய்வாளர் 400 அடி பைபாஸ் சாலையில் படிவம்-91 மூலம் கைப்பற்றியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படுகின்ற அ.த.சா.ஆ.3 புகாரில் அது எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று தேதி அதில் இருக்கின்றதா என்றால் புகாரின் முன் பக்கத்தில் தேதி இல்லை. அடுத்த பக்கத்தில் என்னுடைய கையொப்பத்திற்கு கீழே தேதி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. புகாரில் ஆர்ச் அந்தோனியார் நகர் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது அது எந்த ஊரில் உள்ள ஆர்ச் அந்தோனியார் நகர் என்றால் வெள்ளானூர் கிராமத்தை சேர்ந்தது. புகாரில் ஆர்ச் அந்தோனியார் நகர் வெள்ளானூர் கிராமத்தை சேர்ந்தது என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் ஒரு speed break இருந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த இடம் சர்வீஸ் ரோடு என்றால் சரிதான். அந்த இடத்தில் speed break இருப்பதாலும் சர்வீஸ் ரோடு என்பதாலும் அதில் வாகனங்கள் வேகமாக வரமுடியாது என்றால் வண்டி ஓட்டுவதை பொறுத்து இருக்கின்றது. நாங்கள் செக் செய்த இடம்

நெமிலிச்சேரி நோக்கி செல்லுகின்ற ரோடு கிடையாது அது காட்டூரை நோக்கி செல்கின்ற ரோடு. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் பற்றிய அங்க அடையாளம் குறித்தோ அவர்கள் என்ன நிற ஆடைகள் அணிந்திருந்தார்கள் என்றோ அவர்களது உயரம் குறித்தோ, பருமன் குறித்தோ எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பொலிரோ வாகனத்தை எப்பொழுது சீஸ் செய்தார் என்றால் 02.03.2024 அன்று சீஸ் செய்தார்கள். எனக்கு டைம் தெரியாது. ஹோண்டா சைன் வாகனத்தை அம்பத்தூர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து 17.05.2024 அன்று பெற்றுக்கொண்டேன். இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தபொழுது அவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் 17.05.2024 அன்று மனுதாக்கல் செய்து வாகனத்தை பெற்றுக்கொண்டேன் என்று சொல்லவில்லை என்றால் ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை ஆனால் அது அவரது knowledge க்கு தெரியும். 07.03.2024 அன்று 2 பேர்களை வரச்சொல்லி அவர்களை இன்ஸ்பெக்டர் அடையாளம் காட்டினாரா என்றால் 5 பேரை வைத்திருந்தார்கள் அதில் இருக்கின்றார்களா என்று கேட்டார் நான் எதிரிகளை அடையாளம் காட்டினேன். இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தபொழுது அவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் 5 பேர்கள் இருந்தார்கள். அதில் 2 பேர்களை அடையாளம் காட்டினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அடையாளம் காட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் கூட ஆய்வாளர் சொல்லி தான் எதிரிகளை அடையாளம் காட்டியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பாக எதிரிகள் யார் என்னவென்று எனக்கு விவரம் தெரியாது. அன்றைய தினம் காவல் நிலையத்தில் எனக்கு மேல் அதிகாரி கிரைம் இன்ஸ்பெக்டர் திரு.தியாகராஜன் என்றால் சரிதான். அவர் தான் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். நானும் கணேசனும் அவருக்கு கீழ் தான் பணி செய்கின்றோம் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு பிறகு எதிரிகள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழாக தடுப்பு காவலில் வைக்கப்பட்டார்கள் என்றால் சரிதான். எதிரிகளை எங்கள் காவல் நிலையத்தில் தடுப்பு காவலில் வைப்பதற்காக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான என்னுடைய மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க

அவர் தயார் செய்த ஆவணங்களில் கையெழுத்து செய்து கொடுத்துவிட்டு தற்பொழுது எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் பணியில் இருந்ததை காட்டக்கூடிய ஆவணம் எதனையும் ஒப்படைக்காததால் நான் அன்றைய தினம் பணியில் இல்லாததால் தான் இந்த ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல கணேசனும் அன்றைய தினம் பணியில் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**